**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of
Communal Clash Cases in Southern Districts
Madurai.

Calender : C.C. No. 30/2018
Miscellaneous :
Preliminary Register :
Sessions :
Deposition of witness for Prosecution PW2
Defence
Court
Name : சுமதி
Father's/Husband Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 19.12.2022

**முதல் விசாரணை**

நான் தற்போது கொடைக்கானல் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 12.09.2016 அன்று அம்மையநாயக்கனூர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியிலிருந்த போதுகாலை 10.00 மணிக்கு நிலையம் ஆஜராகி எனக்கு தெரிவித்த தகவலின் பேரில் காலை 10.15 மணிக்கு அதனை பொதுநாட்குறிப்பில் பதிவு செய்தேன். பின்னர் ஆய்வாளரிடம் தகவல் தெரிவித்து, சோதனைக்கு செல்ல அனுமதி கடிதம் பெற்று காலை 10.45 மணிக்கு நானும் தலைமைக்காவலர்-சுசீலா, மற்றும் சதீஸ்குமார் ஆகியோருடன் இருசக்கரவாகனத்தில் பள்ளபட்டி அருகில் உள்ள இராமன்செட்டிபட்டி அருகில்

கண்காணித்துக்கொண்டிருந்தபோது அங்கு சந்தேகப்படும்படியாக நின்றுகொண்டிருநத சுமார் 61 வயது மதிக்கத்தக்க பெண்னை விசாரித்தபோது இவ்வழக்கின் எதிரி பெயர் விலாசம் கூறினார். அவர் பெருமாயி க/பெ. அம்மாசி என்றும்கூறினார். அவரிடம் நான் உங்களை சோதனை செய்ய வேண்டும் அதற்காக அருகில் உள்ள நீதித்துறை நடுவரிடமோ அல்லது அரசு அலுவலர் முன்போ சோதனை செய்ய கேட்க உரிமையுள்ளது என்று கூற ஆஜர் வேண்டாம் என்றும் தாங்களே சோதனை செய்யலாம் என்று கூறினார். அவர் கூறிய சம்மதத்தை எழுத்துமூலம் பதிவு செய்தேன். 11.45 மணிக்கு அதில் தனி நபர் சாட்சிகள் இல்லை என்பதால் என்னுடன் வந்த காவலர்கள் முன்னிலையில் பதிவு செய்தேன். அவரிடம் இருந்த கட்டைபையை வாங்கி சோதனை செய்தார் அதில் உலர் நிலையில் கஞ்சா இருந்தது. அதனை முள்தராசில் எடை போட்ட போது அது 1 கிலோ 500 கிராம் கஞ்சா இருந்தது. 12.15 மணிக்கு எதிரியை கைது செய்தேன். அதில் 50 கிராம் கஞ்சாவை வேதியல் பகுப்பாய்விற்காக தனியே எடுத்து போலீஸ் பட்டன் சீல் வைத்தும், மீதமுள்ள 1 கிலோ 450 கிராம் கஞ்சாவை தனியே கட்டியே போலீஸ் பட்டன் சீல் வைத்தும், நான் 13.00 மணிக்கு அத்தாட்சி தயாரித்தேன். தனிநபர்கள் யாரும் சாட்சியாக இருக்க முன்வராததால் அதில் நானும், முதல் நிலை காவலர் சதீஷ்குமாரும் சாட்சி கையெழுத்து செய்தோம். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.1. ஆகும். அதன் பிறகு எதிரி மற்றும் சொத்துக்களுடன் காவல் நிலையத்திற்கு வந்தோம். எதிரி மீது நான் நிலைய குற்ற எண் 313/2016 சட்டபிரிவு 8 (c) r/w 20 b (ii)(B) NDPSACt ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். பின்னர் அசல் முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். பின்னர் வழக்கு பதிவு செய்த விபரம் குறித்தும் கைது செய்த விபரம் குறித்தும் ஆய்வாளருக்கு விரிவான அறிக்கை தயாரித்தேன். விசாரணை நகலை ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். இதுசம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார். ரகசிய தகவல் அ.சா.ஆ. 2 ஆகும் .. ஆய்வாளர் வழங்கிய அனுமதி கடிதம் அ.சா.ஆ. 3 ஆகும். சோதனை சம்மத கடிதம் அ.சா.ஆ. 4 ஆகும். கைது நமூனா. அ.சா.ஆ. 5 ஆகும். முதல் தகவ்லன அறிக்கை அ.சா.ஆ. 6 ஆகும். படிவம்-91 அ.சா.ஆ. 7 ஆகும். பிரிவு 57 ன் படியான விரிவான அறிக்கை அ.சா.ஆ. 8 ஆகும்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>